வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3016/ஆ5/2023, நாள். 18.07.2023

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – வளர்இளம் பருவ மாணவர்களிடம் காணப்படும் வகை –I நீரழிவு பாதிப்பு – பாதிக்கப்பட்டுள்ள பள்ளி மாணவர்கள் நலன் காக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் – தொடர்பாக |
| பார்வை | சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34767/எம்/இ1/2023, நாள். 12.07.2023 |

.....

பன்னாட்டு டயாபெடிஸ் அமைப்பின் (IDF) அறிக்கையில் உலக அளவில் இந்தியாவில் அதிக அளவு குழந்தைகள் மற்றும் வளர்இளம் பருவத்தினர் வகை –I நீரழிவு குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய குழந்தைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு நாளும் இன்சுலின் மருந்தினை ஊசி வழியே செலுத்துதல், நாள்தோறும் இரத்த சர்க்கரை அளவைக் கண்காணித்தல் உள்ளிட்ட செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் நிலையில், இத்தகைய வகை –I நீரழிவு குறைபாடுடைய மாணவர்கள் தங்களது பெரும்பாலான நேரத்தை பள்ளியில் செலவிடுவதைக் கருத்திற்கொண்டு அவர்களின் நலன் காக்கும் பொருட்டு, பள்ளி நிர்வாகத்திற்கு தகுந்த அறிவுரைகள் பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் கீழ்காணும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. வகை –I நீரழிவினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தங்களது இரத்த சர்க்கரை அளவை சோதித்து அறிதல், இன்சுலின் எடுத்துக் கொள்ளுதல், வழக்கமான உணவு உண்ணும் நேரத்திற்கு இடைப்பட்ட நேரங்களில் சிற்றுண்டி எடுத்துக் கொள்ளுதல், மருத்துவர் பரிந்துரைப்படி நீரழிவு தன்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்றவை தேவைப்படலாம். எனவே, இத்தகைய மாணவர்கள் மேற்கண்டுள்ளவற்றை மேற்கொள்ள தேர்வு நேரம் மற்றும் பள்ளி நேரங்களில் வகுப்பாசிரியர்கள் அனுமதிக்க வேண்டும். மேலும், மருத்துவரின் பரிந்துரைப்படி, அவர்கள் விளையாட்டு போட்டிகளிலும் பங்கேற்க வாய்ப்பளிக்க வேண்டும்.
2. பள்ளி மற்றும் தேர்வு நேரங்களில், இத்தகைய பாதிப்புடைய மாணவர்கள் தங்களுடன் நீரழிவு பாதிப்பிற்கான மருந்துகள், மாத்திரைகள் எடுத்துவர அனுமதிக்க வேண்டும். பழங்கள், சிற்றுண்டிகள், குடிநீர், உலர் பழங்கள் உள்ளிட்டவற்றையும் தங்களுடன் எடுத்து வர அனுமதிக்க வேண்டும்.
3. குளுக்கோ மீட்டர் போன்ற இரத்த சர்க்கரை அளவை சோதித்தறியும் உபகரணங்களை பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் தங்களுடன் எடுத்துவர அனுமதிக்க வேண்டும்.

4. தொடர் குளுக்கோஸ் கண்காணிப்பிற்கு (CGM – Continuous Glucose Monitoring) (FGM – Flash Glucose Monitoring) மற்றும் இன்சுலின் பம்பு போன்றவற்றை இத்தகைய பாதிப்புடைய மாணவர்கள் தங்களது உடலில் பொருத்தி பயன்படுத்துவரின், அதனை தொடர்ந்து பள்ளி நேரம் / தேர்வு நேரங்களில் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். மேலும், திறன் அலைபேசியைப் (Smart Phone) பயன்படுத்தி அளவீடுகள் மேற்கொள்ளப்படின் தேர்வு நேரங்களின்போது, அலைபேசியினை தேர்வு அறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்து குளக்கோஸ் அளவினைக் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

5. பள்ளி நிர்வாகங்கள் தங்களிடம் பயிலும் வகை –I நீரழிவு பாதிப்புடைய மாணவர்களின் நலனை காக்கும் பொருட்டு அவர்களுக்கு தகுந்த வகப்பறைக்சூழலை ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேற்காணும் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி செயல்பட அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள் / தாளாளர்கள் / மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

19/7/23
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

19.07.23

பெறுநர்.
அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள் / தாளாளர்கள் / மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.

1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் /தொடக்கக் கல்வி)
வேலூர் மாவட்டம்.
(இப்பொருள் சார்பான விவரங்கள் பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.)